99/2026-T

Question Booklet Alpha Code	A	Question Booklet Serial Number:

Total Number of Questions : 100 **Time : 1 Hour 30 Minutes**

Maximum Marks : 100

INSTRUCTIONS TO CANDIDATES

1. **The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet alpha code viz. A, B, C & D.**
2. **The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.**
3. **The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.**
4. **If you get a question booklet where the alpha code does not match to the allotted alpha code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.**
5. **The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is unnumbered, please get it replaced by new question booklet with same alpha code.**
6. **The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet until the indication is given to start answering.**
7. **Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him/her contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so, he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same alpha code. This is most important.**
8. **A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.**
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. **Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball Point Pen in the OMR Answer Sheet.**
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3rd mark will be deducted. No negative mark for unattended questions.**
12. **No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.**
13. **Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.**

A

DO NOT WRITE HERE

1. இந்தியாவை விட்டு வெளியேறு இயக்கம் (Quit India Movement) தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?

(i) 1929 - ஆம் ஆண்டு, லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் இந்தியாவை விட்டு வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ii) 1930 - ஆம் ஆண்டு, உப்புச் சட்டத்தை மீறி இந்தியாவை விட்டு வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்டது.

(iii) "செய் அல்லது செத்து மடி" (Do or Die) என்ற முழக்கத்துடன் அனைவரும் இவ்வியக்கத்தில் பங்கேற்குமாறு காந்தியடிகள் அழைப்பு விடுத்தார்.

(iv) சௌரி சௌரா சம்பவத்தைத் தொடர்ந்து காந்தியடிகள் இந்தியாவை விட்டு வெளியேறு இயக்கத்தைத் திரும்பப் பெற்றார்.

(A) (i) மற்றும் (iii) மட்டும்
(B) (iii) மட்டும்
(C) (ii) மற்றும் (iv) மட்டும்
(D) (ii) மட்டும்

2. ஆரிய சமாஜத்தை நிறுவியவர் யார்?

(A) சுவாமி தயானந்த சரஸ்வதி
(B) ராஜா ராம் மோகன் ராய்
(C) சுவாமி விவேகானந்தர்
(D) ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

3. சீனாவில் நீண்ட பயணத்தை (Long March) வழிநடத்தியவர் யார்?

(A) யுவான் ஷிகாய்
(B) சியாங் கை-ஷேக்
(C) சன் யாட்-சென்
(D) மாவோ சேதுங்

4. மார்த்தாண்ட வர்மா பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை தவறானவை?

(i) நவீன திருவிதாங்கூர் அரசை உருவாக்கியவராக இவர் கருதப்படுகிறார்.

(ii) 1809 - ஆம் ஆண்டு குண்டறா பிரகடனத்தை வெளியிட்டார்.

(iii) 1741 - ஆம் ஆண்டு கொலச்சல் போரில் டச்சுக்காரர்களைத் தோற்கடித்தார்.

(iv) 1750 - ஆம் ஆண்டு திருப்படிதானம் நிகழ்வை நடத்தினார்.

(A) (iv) மட்டும்
(B) (i) மற்றும் (ii) மட்டும்
(C) (ii) மட்டும்
(D) (iii) மற்றும் (iv) மட்டும்

5. 2026ஆம் ஆண்டு ஆண்களுக்கான டி20 உலகக் கோப்பையை வெல்வதற்காக இந்தியா எந்த நாட்டைத் தோற்கடித்தது?

(A) இங்கிலாந்து
(B) பாகிஸ்தான்
(C) இலங்கை
(D) நியூசிலாந்து

6. கோரியாலிஸ் விளைவு எந்தப் பகுதியில் அதிகமாக உணரப்படுகிறது?

(A) பூமத்தியரேகைப் பகுதிகள்

(B) துருவப் பகுதிகள்

(C) வெப்பமண்டலப் பாலைவனப் பகுதிகள்

(D) வெப்பமண்டலப் பெருங்கடல்கள்

7. மத்தியதரைக் கடல் காலநிலையின் சிறப்பியல்பு அல்லாதது எது?

(A) இக்காலநிலை 30° - 40° அட்சரேகைப் பகுதிகளில் காணப்படுகிறது.

(B) வெப்பமான, வறண்ட கோடைக்காலமும் மிதமான மழையுடன் கூடிய குளிர்காலமும் நிலவுகின்றன.

(C) கோடைப் பருவமழைக் காற்றுகளால் மழைப்பொழிவு கிடைக்கிறது.

(D) சராசரி ஆண்டு மழைப்பொழிவு 35 செ.மீ. முதல் 90 செ.மீ. வரை இருக்கும்.

8. ஆற்றின் நீரோட்ட அரிப்பு செயல்முறையின் விளைவாக உருவாகும் நிலத்தோற்றங்கள் எவை?

(i) கூம்பு வடிவப் பாறைகள் (Coniferous rocks)

(ii) ஆற்றுப்படுகை முகத்துவாரப் படிவுகள் (Delta)

(iii) பெரிய மலைக் குகைகள்

(iv) பாறைக் குழிகள் (Pot holes)

(A) (ii) மற்றும் (iii) மட்டும்

(B) (iii) மற்றும் (iv) மட்டும்

(C) மேற்கண்ட அனைத்தும்

(D) (ii) மற்றும் (iv) மட்டும்

9. மேற்கு ஆஸ்திரேலியக் கடற்கரையை ஒட்டி வீசும் வெப்பமண்டலச் சூறாவளிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(A) ஹரிக்கேன்

(B) வில்லி-வில்லீஸ்

(C) டொர்னாடோ

(D) டைஃபூன்

10. உலகளாவிய பாரம்பரிய டேக்வாண்டோ கூட்டமைப்பின் 'கிராண்ட் மாஸ்டர் 9ஆம் டான்' பட்டம் பெற்ற யும்னம் கெம்சந்த் சிங், எந்த மாநிலத்தின் முதலமைச்சராக உள்ளார்?

(A) அசாம்

(B) மணிப்பூர்

(C) மேகாலயா

(D) அருணாச்சலப் பிரதேசம்

11. பின்வரும் கூற்றுகளைக் கவனியுங்கள்:

(i) பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் (CCEA) தலைவர் பிரதமர் ஆவார்.

(ii) குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) தொடர்பான பரிந்துரைகளை வேளாண் செலவுகள் மற்றும் விலைகள் ஆணையம் (CACP) வழங்குகிறது.

மேற்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

(A) (i) மட்டும் (B) (ii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) (D) எதுவுமில்லை

12. கூற்று (A): பசுமைப் புரட்சி இந்தியாவை உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவை அடையச் செய்தது.

காரணம் (R): கோதுமை மற்றும் நெல் சாகுபடியில் அதிக மகசூல் தரும் விதைகள், உரங்கள் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A)-க்கான சரியான விளக்கமாகும்.

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி; ஆனால் (R) என்பது (A)-க்கான சரியான விளக்கம் அல்ல.

(C) (A) சரி; (R) தவறு.

(D) (A) தவறு; (R) சரி.

13. 1991ஆம் ஆண்டின் புதிய பொருளாதாரக் கொள்கையில் இடம்பெறாதது எது?

(A) தாராளமயமாக்கல் (B) தனியார்மயமாக்கல்

(C) உலகமயமாக்கல் (D) மையப்படுத்துதல்

14. புதிய வேளாண்மைக் கொள்கையில் ஆதரவு விலையின் விளைவு என்ன?

(A) விவசாயிகளுக்கு உறுதியான விலை கிடைக்கிறது.

(B) தனியார் வணிகர்கள் அதிகமாகச் சுரண்டுகின்றனர்.

(C) உற்பத்தி குறைகிறது.

(D) இறக்குமதி அதிகரிக்கிறது.

15. இந்தியாவின் நிதி அமைப்பைக் கட்டுப்படுத்தும் ஒழுங்குமுறை அமைப்பு எது?

(A) இந்திய ஸ்டேட் வங்கி (B) நிதி ஆயோக்

(C) இந்திய ரிசர்வ் வங்கி (D) நிதி அமைச்சகம்

16. அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவர் யார்?

(A) ஜவஹர்லால் நேரு

(B) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

(C) டாக்டர் ராஜேந்திர பிரசாத்

(D) சர்தார் வல்லபாய் படேல்

17. இந்திய அரசியலமைப்பின் 'இதயமும் ஆன்மாவும்' என்று டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் குறிப்பிட்ட அடிப்படை உரிமை எது?

(A) பண்பாட்டு மற்றும் கல்வி உரிமைகள்

(B) சமத்துவ உரிமை

(C) அரசியலமைப்புத் தீர்வுகளுக்கான உரிமை

(D) சுதந்திர உரிமை

18. பின்வரும் மாநிலங்களில் இரு அவைகள் கொண்ட சட்டமன்ற அமைப்பு நடைமுறையில் உள்ள மாநிலம் எது?

(A) கேரளம்

(B) தமிழ்நாடு

(C) குஜராத்

(D) கர்நாடகம்

19. சொத்துரிமையைச் சாதாரண சட்ட உரிமையாக மாற்றிய அரசியலமைப்புத் திருத்தம் எது?

(A) 73 - வது அரசியலமைப்புத் திருத்தம்

(B) 44 - வது அரசியலமைப்புத் திருத்தம்

(C) 42 - வது அரசியலமைப்புத் திருத்தம்

(D) 91 - வது அரசியலமைப்புத் திருத்தம்

20. இந்திய அரசியலமைப்பின் எந்தப் பகுதியில் அரசின் வழிகாட்டும் நெறிமுறைகள் இடம்பெற்றுள்ளன?

(A) பகுதி 2

(B) பகுதி 1

(C) பகுதி 3

(D) பகுதி 4

21. தகுதியற்ற ஒருவர் ஒரு பதவியை (வேலையை) வகிப்பதைத் தடுக்கும் வகையில் உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) ஆணையுறுத்தும் நீதிப்பேராணை (Mandamus)

(B) தகுதி வினவும் நீதிப்பேராணை (Quo Warranto)

(C) ஆவணங்களைப் பரிசீலிக்கும் நீதிப்பேராணை (Certiorari)

(D) தடையுறுத்தும் நீதிப்பேராணை (Prohibition)

22. இந்தியாவில் ஊராட்சி ராஜ் (Panchayat Raj) அமைப்புகளில் மின்-ஆளுகையை வலுப்படுத்த உருவாக்கப்பட்ட விரிவான டிஜிட்டல் ஆளுகைத் தளம் எது?

(A) மேரி பஞ்சாயத்து
(B) இ-கிராம் ஸ்வராஜ்
(C) கிராம் மஞ்சித்ரா
(D) சமர்த் பஞ்சாயத்து

23. கே-ஸ்மார்ட் (K-SMART) பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?

(i) அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் அவை வழங்கும் சேவைகளும் ஒரே தளத்தில் டிஜிட்டல் முறையில் கிடைக்கும்.

(ii) ஒருங்கிணைந்த உள்ளாட்சி நிர்வாக மேலாண்மை அமைப்பின் (ILGMS) மூலம் கே-ஸ்மார்ட்டை அணுகலாம்.

(iii) கே-ஸ்மார்ட் 2024ஆம் ஆண்டு செயல்பாட்டுக்கு வந்தது.

(A) (i), (iii)
(B) (i), (ii), (iii)
(C) (i), (ii)
(D) (ii) மட்டும்

24. கேரள காவல்துறையின் 'ஸ்பீக் அப்' (Speak Up) என்பது என்ன?

(A) பெண்களுக்கு எதிரான இணையக் குற்றங்களைத் தடுப்பதற்கான கேரள காவல்துறையின் முன்னெடுப்பு.

(B) குடும்ப வன்முறையைத் தடுப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பையும் ஆதரவையும் உறுதிப்படுத்துவதற்குமான கேரள காவல்துறையின் சிறப்புப் பணிக்குழு.

(C) குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கான கேரள காவல்துறையின் முன்னெடுப்பு.

(D) மூத்த குடிமக்களைப் பாதுகாப்பதற்கான கேரள காவல்துறையின் முன்னெடுப்பு.

25. கேரள நிலச் சீர்திருத்தச் சட்டம், 1963-இல் நில உச்சவரம்பு தொடர்பான பிரிவு எது?

(A) பிரிவு 80
(B) பிரிவு 82
(C) பிரிவு 83
(D) பிரிவு 84

26. மாநிலத் தேர்தல் ஆணையரைப் பற்றிக் கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் தவறானது/தவறானவை எவை?

(i) மாநிலத் தேர்தல் ஆணையர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்.

(ii) மாநிலத் தேர்தல் ஆணையரின் பதவிக்காலம், பதவியேற்ற நாளிலிருந்து 5 ஆண்டுகள் அல்லது 62 வயது நிறைவடையும் வரை, இவற்றில் எது முதலில் வருகிறதோ அதுவரையாகும்.

(iii) தொகுதி மறுவரையறைச் சட்டம், 2002-இன் கீழ் அமைக்கப்பட்ட இந்தியத் தொகுதி மறுவரையறை ஆணையத்தின் உறுப்பினர்களில் மாநிலத் தேர்தல் ஆணையரும் ஒருவர் ஆவார்.

(A) (i), (ii), (iii)
(B) (i), (iii)
(C) (ii) மட்டும்
(D) (ii), (iii)

27. ரேச்சல் கார்சனின் 'சைலன்ட் ஸ்பிரிங்' (Silent Spring) எனும் நூல் எந்தத் தலைப்பை முக்கியக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்டது?

(A) புவி வெப்பமடைதல்

(B) வேதியியல் பூச்சிக்கொல்லிகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள்

(C) அணு ஆயுதச் சோதனைகள்

(D) காடழிப்பு

28. செயற்கை இதயமுடுக்கிகளில் (Artificial Pacemakers) மின்சக்தி ஆதாரமாகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மின்கலம் எது?

(A) துத்தநாகம் - கார்பன் மின்கலம்

(B) நிக்கல் - காட்மியம் மின்கலம்

(C) ஈயம் - அமில மின்கலம்

(D) லித்தியம் - அயோடின் மின்கலம்

29. விலங்கு உலகில் மிக அதிகமாகக் காணப்படும் புரதம் எது?

(A) கொலாஜன் (B) கெரட்டின்

(C) ஃபைப்ரினோஜன் (D) ரூபிஸ்கோ

30. குறிப்பாகச் சீம்பாலின் மூலம், தாய்ப்பாலிலிருந்து குழந்தைக்குக் கிடைக்கும் நோய் எதிர்ப்பு மூலப்பொருள் (Antibody) எது?

(A) Ig A (B) Ig D

(C) Ig E (D) Ig M

31. வெற்றிடத்தில் ஒரு குழி ஆடியின் குவியத் தொலைவு 2 மீட்டர் ஆகும். ஒளிவிலகல் எண் 2.759 கொண்ட ஊடகத்தில் அதன் குவியத் தொலைவு என்ன?

(A) 2 மீட்டர் (B) 2×2.759 மீட்டர்

(C) $\frac{2}{2.759}$ மீட்டர் (D) இவற்றில் எதுவுமில்லை

32. ஒரே தொடக்கத் திசைவேகத்துடன் இரண்டு பொருள்கள் எறியப்படும்போது, அவை ஒரே கிடைமட்ட வீச்சைப் (Horizontal Range) பெறுகின்றன. அவை எறியப்படும் கோணங்கள் யாவை?

(A) 20° & 60° (B) 25° & 65°

(C) 30° & 55° (D) 40° & 60°

33. உலகளவில் குவாண்டம் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சியை முன்னெடுப்பதற்காக இந்தியா தொடங்கிய தேசியத் திட்டத்தின் பெயர் என்ன?

(A) தேசிய மீத்திறன் கணினி இயக்கம் (NSM)

(B) டிஜிட்டல் இந்தியா இயக்கம் (DIM)

(C) தேசிய குவாண்டம் இயக்கம் (NQM)

(D) விஷன் குவாண்டம் 2030

34. தனிம வரிசை அட்டவணையில் ஒரு தொகுதியில் மேலிருந்து கீழாகச் செல்லும்போது அயனியாக்கும் என்தால்பி ஏன் குறைகிறது?

(i) அணுக்கரு மின்னூட்டம் குறைகிறது.

(ii) அணுக்கரு மின்னூட்டத்தின் அதிகரிப்பைவிட எலக்ட்ரான் கூட்டுகளின் எண்ணிக்கை அதிகமாக அதிகரிக்கிறது.

(iii) எலக்ட்ரான் கூட்டுகளின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை.

(A) (i) (B) (ii)

(C) (iii) (D) (i) மற்றும் (iii)

35. ரூதர்ஃபோர்டின் தங்கத் தகடு சோதனையின் மூலம் கண்டறியப்பட்டது எது?

(A) அணுக்கரு (B) நியூட்ரான்

(C) புரோட்டான் (D) எலக்ட்ரான்

36. 2025ஆம் ஆண்டு வேதியியலுக்கான நோபல் பரிசு எந்த ஆராய்ச்சித் தலைப்புடன் தொடர்புடையது?

(A) புரதத்தின் கட்டமைப்பு

(B) உலோக - கரிமக் கட்டமைப்புகள்

(C) லித்தியம் மின்கலங்கள்

(D) குவாண்டம் புள்ளிகள்

37. 'மரியகுட்டியூடே கத்து' (Mariyakuttiyude Kathu) பின்வரும் எந்த இலக்கிய வகையைச் சார்ந்தது?

(A) சுயசரிதை (B) மாப்பிள்ளைப் பாடல்

(C) நாடகம் (D) வாழ்க்கை வரலாறு

38. 'மறக்குடைக்குள்ளிலே மகாநரகம்' (Marakkudakkullile Mahanarakam) என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

(A) எம்.ஆர். பட்டத்திரிப்பாடு (B) வி.டி. பட்டத்திரிப்பாடு

(C) எம்.பி. பட்டத்திரிப்பாடு (D) என். கிருஷ்ணபிள்ளை

A

39. 'பாரத் பவன்' (Bharat Bhavan) தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(i) கேரளத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணும் வகையில் தேசிய மற்றும் சர்வதேச பண்பாட்டுப் பரிமாற்றத்தை எளிதாக்குவது இதன் நோக்கமாகும்.

(ii) இது 1984ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

(iii) இது மத்திய அரசின் நிறுவனமாகும்.

(A) (i) மட்டும் சரியானது.

(B) (ii) மட்டும் சரியானது.

(C) (i) மற்றும் (ii) சரியானவை.

(D) (i), (ii) மற்றும் (iii) அனைத்தும் சரியானவை.

40. 2026ஆம் ஆண்டுக்கான 50வது வயலார் இலக்கிய விருதை வென்றவர் யார்?

(A) அசோகன் சருவில்
(B) ஈ. சந்தோஷ் குமார்
(C) எஸ். ஹரீஷ்
(D) ஆர். ராஜஸ்ரீ

41. ஒரு முக்கோணத்தின் பக்கங்களின் விகிதம் 3 : 4 : 5 ஆகவும், அதன் சுற்றளவு 36 செ.மீ. ஆகவும் இருந்தால், அதன் பரப்பளவு எவ்வளவு சதுர செ.மீ.?

(A) 24
(B) 54
(C) 96
(D) 86

42. ஒரு தேர்வில் தேர்ச்சி பெற 40% மதிப்பெண்கள் தேவை. ஒரு மாணவர் 30 மதிப்பெண்கள் பெற்று, தேர்ச்சி பெறுவதற்குத் தேவையான மதிப்பெண்களைவிட 50 மதிப்பெண்கள் குறைவாகப் பெற்றுள்ளார். அந்தத் தேர்வுக்கான மொத்த மதிப்பெண்கள் எவ்வளவு?

(A) 300
(B) 100
(C) 200
(D) 250

43. $2^x \cdot 2^{x+1} = 32$ எனில், x-இன் மதிப்பு என்ன?

(A) 2
(B) 3
(C) 4
(D) 5

44. $9 - [8 - (8 - 6 \times 2) \div 4] =$ _____

(A) 8
(B) 7
(C) 6
(D) 0

45. 0, 7, 26, 63, .. என்ற தொடரில் அடுத்த உறுப்பு எது?

(A) 126
(B) 189
(C) 124
(D) 186

46. பின்வரும் எண்களில் இக்குழுவில் சேராத எண் எது?

(A) 21 (B) 31

(C) 51 (D) 81

47. 15 + 8 ÷ 2 × 4 - 7 = _____

(A) 30 (B) 20

(C) 24 (D) 18

48. 1, 2, 3, 4, 5 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி எத்தனை மூன்று இலக்க எண்களை உருவாக்க முடியும்?

(A) 50 (B) 60

(C) 70 (D) 40

49. 15 நபர்களின் சராசரி வயது 25 ஆகும். மேலும் ஒருவர் அந்தக் குழுவில் சேர்ந்தால், சராசரி வயது 1 அதிகரிக்கிறது. புதிதாகச் சேர்ந்த நபரின் வயது என்ன?

(A) 30 (B) 40

(C) 41 (D) 45

50. A மற்றும் B இணைந்து ஒரு வேலையை 8 நாட்களில் முடிப்பார்கள். B மட்டும் அந்த வேலையை 12 நாட்களில் முடிப்பார் எனில், A மட்டும் அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

(A) 25 (B) 20

(C) 24 (D) 30

51. ஒருவரைக் கைது செய்வதைத் தவிர்ப்பதற்காக அவருக்கு இருப்பிடம், உணவு, வெடிமருந்துகள் அல்லது போக்குவரத்து வசதிகளை வழங்குவது, பாரதிய நியாய சன்ஹிதா (BNS)-வின் கீழ் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) மறைத்தல் (Concealment)

(B) ஏமாற்றுதல் (Cheating)

(C) தங்கவைத்தல் (Halting)

(D) அடைக்கலம் அளித்தல் (Harbour)

52. பாரதிய நியாய சன்ஹிதா (BNS)-வின் கீழ் தண்டனைக் காலத்தின் பின்னங்களைக் கணக்கிடும்போது, வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், ஆயுள் தண்டனையானது எத்தனை ஆண்டுகள் சிறைத்தண்டனைக்கு இணையாகக் கணக்கிடப்படும்?

(A) 20 ஆண்டுகள் (B) 14 ஆண்டுகள்

(C) 24 ஆண்டுகள் (D) 30 ஆண்டுகள்

A

53. பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS), 2023-இன் பிரிவு 170(1)-இன்படி, எந்த முதன்மையான நிபந்தனையின் அடிப்படையில் காவல்துறை அதிகாரி ஒருவர் பிடியாணை அல்லது நீதித்துறை நடுவரின் உத்தரவு இன்றி ஒருவரைக் கைது செய்யலாம்?

(A) மற்றொரு அதிகார வரம்பிற்குட்பட்ட பிணையில் விட முடியாத குற்றத்தை அந்த நபர் செய்திருக்க வேண்டும்.

(B) ஒருவர் அறியத்தக்க குற்றத்தைச் செய்யத் திட்டமிட்டுள்ளார் என்பதைக் காவல்துறை அதிகாரி அறிந்திருக்க வேண்டும்; மேலும், அக்குற்றம் நிகழாமல் வேறு வழியில் தடுக்க முடியாத நிலை இருக்க வேண்டும்.

(C) ஒருவர் பிணையில் விட முடியாத குற்றத்தைச் செய்துள்ளார் எனப் பொது ஊழியரிடமிருந்து எழுத்துப்பூர்வமான புகார் பெறப்பட்டிருக்க வேண்டும்.

(D) வழக்கமான போக்குவரத்து சோதனையின்போது ஒருவர் தனது அடையாளத்தைத் தெரிவிக்க மறுக்க வேண்டும்.

54. தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ மனரீதியாக அல்லது உடல்ரீதியாக மாற்றுத்திறன் கொண்ட ஒருவரிடம் இருந்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS)-வின் பிரிவு 183-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் எவ்வாறு கருதப்படும்?

(A) பொருத்தமற்றது

(B) முடிவான சான்று

(C) முதன்மை விசாரணைக்கு மாற்றான வாக்குமூலம்

(D) பொது ஆவணம்

55. பாரதிய நியாய சன்ஹிதா (BNS)-வின்படி, அபராதம் செலுத்தத் தவறியதற்காகக் குற்றவாளியைச் சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிடும் சிறைத்தண்டனைக் காலம், அபராதத்துடன் சிறைத்தண்டனையும் விதிக்கக்கூடிய குற்றத்தைப் பொறுத்தவரை, அந்தக் குற்றத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சிறைத்தண்டனைக் காலத்தில் எத்தனை பங்கிற்கு மிகாமல் இருக்க வேண்டும்?

(A) ஒரு பாதி
(B) ஒரு நான்கில் ஒரு பங்கு
(C) ஒரு மூன்றில் ஒரு பங்கு
(D) ஒரு பத்தில் ஒரு பங்கு

56. கைது செய்யப்படும் நபரின் உறவினருக்கோ நண்பருக்கோ கைது பற்றிய தகவலைத் தெரிவிக்க வேண்டிய கடமையை விதிக்கும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதாவின் (BNSS) பிரிவு எது?

(A) பிரிவு 41
(B) பிரிவு 49
(C) பிரிவு 48
(D) பிரிவு 43

57. மின்னணுச் சான்றுகளுக்கான ஆய்வாளர் (Examiner of Electronic Evidence) ஒரு நிபுணராகக் கருதப்படுவார் என்று கூறும் பாரதிய சாக்ஷ்ய அதினியத்தின் (BSA) பிரிவு எது?

(A) பிரிவு 40 (B) பிரிவு 39

(C) பிரிவு 32 (D) பிரிவு 37

58. ஒரு நபருக்கும் மற்றொரு நபருக்கும் இடையிலான உறவுமுறை இருப்பது குறித்து, குடும்ப உறுப்பினர் என்ற முறையில் அந்த உறவைப் பற்றி அறிந்துகொள்ளச் சிறப்பான வாய்ப்பைப் பெற்ற ஒருவர் தெரிவிக்கும் கருத்து பின்வருவனவற்றில் எவ்வாறு கருதப்படுகிறது?

I. அது தொடர்புடைய உண்மையாகும்.

II. பாரதிய நியாய சன்ஹிதா, 2023-இன் கீழ் நடைபெறும் வழக்குகளில் திருமணத்தை நிரூபிப்பதற்கு அது தொடர்புடையதல்ல.

(A) I மட்டும் சரியானது.

(B) II மட்டும் சரியானது.

(C) I மற்றும் II இரண்டும் சரியானவை.

(D) I மற்றும் II இரண்டும் தவறானவை.

59. பாரதிய நியாய சன்ஹிதா (BNS)-வின்படி, ஒரு சட்டப்பூர்வ உரிமையை உருவாக்கும், நீட்டிக்கும், மாற்றும், கட்டுப்படுத்தும், முடிவுக்குக் கொண்டுவரும் அல்லது விடுவிக்கும் ஆவணம் அல்லது ஒரு நபர் சட்டப்பூர்வப் பொறுப்புக்கு உட்பட்டிருப்பதை அல்லது குறிப்பிட்ட சட்டப்பூர்வ உரிமை தனக்கு இல்லை என்பதை ஒப்புக்கொள்ளும் ஆவணம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) போலி ஆவணம் (Fabricated Document)

(B) வழக்கில் உள்ள ஆவணம் (Document in Issue)

(C) மதிப்புமிக்க ஆவணம் (Valuable Security)

(D) முதன்மை ஆவணம் (Primary Document)

60. கேரள காவல்துறைச் சட்டம், 2011-இன்படி காவல்துறையின் கடமைகள் பின்வருவனவற்றில் எவை?

(A) அனைத்து நபர்களின் உயிர், சுதந்திரம், சொத்து, மனித உரிமைகள் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாக்கும் வகையில் பாரபட்சமின்றிச் சட்டத்தைச் செயல்படுத்துதல்.

(B) பொதுமக்களை ஆபத்துகள் மற்றும் தொல்லைகளிலிருந்து பாதுகாத்தல்.

(C) சாலைகள், ரயில்வே பாதைகள் மற்றும் பாலங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொதுச் சொத்துகளையும் பாதுகாத்தல்.

(D) மேற்கண்ட அனைத்தும்.

A

61. கேரள காவல்துறைச் சட்டம், 2011-இன் பிரிவு 14-இன்படி, கேரளக் காவல்துறையின் அமைப்பு மற்றும் பதவி நிலைகள் தொடர்பான சரியான கூற்று எது?

(A) கேரளத்தின் வெவ்வேறு புவியியல் பகுதிகளுக்குத் தனித்தனியான காவல் படைகளை அமைக்கலாம்; அவற்றிற்கு எந்தப் பதவி நிலையிலுள்ள அதிகாரியும் தலைமை தாங்கலாம்.

(B) கேரளக் காவல்துறை மாநிலம் முழுவதற்குமான ஒருங்கிணைந்த காவல் படையாகும். அதன் பதவி நிலைகள் ஏறுவரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் மாநிலக் காவல்துறைத் தலைவர் ஆகிய பதவிகள் மிக உயர்ந்த பதவி நிலையாகும்.

(C) நிர்வாகச் செயல்பாடுகளுக்காகக் கேரளக் காவல்துறையைப் பிரிவுகள், கிளைகள் அல்லது உட்பிரிவுகளாகப் பிரிக்க அரசுக்கு அதிகாரம் இல்லை.

(D) கேரளக் காவல் படையில் காவல்துறைத் துணைத் தலைவர் (Inspector General of Police) பதவியே மிக உயர்ந்த பதவியாகும்.

62. ஒலி மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைத் திரும்பப் பெற, திருத்த அல்லது மாற்றியமைக்க அதிகாரம் பெற்றவர் யார்?

(A) காவல் நிலையப் பொறுப்பு அதிகாரி மட்டும்

(B) மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்

(C) மாவட்ட ஆட்சியர் மட்டும்

(D) மாநிலக் காவல்துறைத் தலைவர் மட்டும்

63. மூன்றாம் தரப்பினரால் வழங்கப்பட்டு ரகசியமானதாகக் கருதப்படும் தகவலை வெளியிடக் கோரி ஒரு பொது அதிகார அமைப்பிடம் விண்ணப்பம் அளிக்கப்படும்போது, அந்தத் தகவலை வெளியிடலாமா என்பதை முடிவு செய்வதற்கு முன் பின்பற்ற வேண்டிய மிகப் பொருத்தமான நடைமுறை எது?

(A) மூன்றாம் தரப்பினரிடம் ஆலோசனை கேட்காமல் தகவலை வெளியிட வேண்டும்.

(B) கோரிக்கையை நிராகரிக்க வேண்டும்.

(C) பொருந்தக்கூடிய சூழ்நிலைகளில், மூன்றாம் தரப்பினரிடம் ஆலோசனை பெறுவது தொடர்பாகச் சட்டம் பரிந்துரைத்துள்ள நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

(D) அனைத்துச் சூழ்நிலைகளிலும், விண்ணப்பதாரர் நீதிமன்றத்தின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

64. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI Act) எந்தப் பிரிவு தகவல்களை வெளியிடுவதிலிருந்து விலக்கு அளிப்பது குறித்தான தொடர்புடையது?

(A) பிரிவு 2(f)
(B) பிரிவு 8
(C) பிரிவு 9
(D) பிரிவு 11

65. போதைப்பொருள்கள் மற்றும் மனமயக்கப் பொருள்கள் சட்டம், 1985 (NDPS Act)-இன் பிரிவு 27-இல் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் எது?

(A) போதைப்பொருள் தொடர்பான குற்றத்தைச் செய்வதற்காக ஒரு கட்டிடம் அல்லது வளாகத்தைப் பயன்படுத்தத் தெரிந்தே அனுமதித்தல்.

(B) இச்சட்டத்தின் கீழ் குற்றம் செய்ய முயற்சித்தல்.

(C) போதைப்பொருள் அல்லது மனமயக்கப் பொருளைப் பயன்படுத்துதல்.

(D) போதைப்பொருள்களின் சட்டவிரோத வணிகத்திற்குப் பண உதவி வழங்குதல்.

66. NDPS சட்டத்தின் அத்தியாயம் IV-இன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்ய ஒருவர் முயற்சிக்கிறார். அக்குற்றத்தை நிறைவேற்றும் நோக்கில் ஒரு செயலைச் செய்தும், குற்றத்தை முழுமையாகச் செய்து முடிக்கத் தவறுகிறார். இந்நிலையில் பின்வருவனவற்றில் எது சரியானது?

(A) குற்றத்தை முழுமையாகச் செய்து முடிக்காததால் அந்த நபரைத் தண்டிக்க முடியாது.

(B) குற்றம் முழுமையாகச் செய்யப்பட்டால் மட்டுமே அந்த நபரைத் தண்டிக்க முடியும்.

(C) குற்றத்தை உண்மையில் செய்து முடித்ததற்காக மட்டுமே தண்டனை விதிக்க முடியும்.

(D) குற்றத்தைச் செய்ய முயற்சித்ததற்காகச் சட்டத்தின்படி அந்த நபரைத் தண்டிக்க முடியும்.

67. சட்டப்படி பாதுகாக்கப்பட வேண்டிய கணினி மூலக் குறியீட்டை (Computer Source Code) ஒருவர் வேண்டுமென்றே மாற்றியமைக்கிறார். தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000-இன் கீழ் இதற்குப் பொருந்தக்கூடிய மிகச் சரியான குற்றம் எது?

(A) அடையாளத் திருட்டு

(B) ஆள்மாறாட்டம் மூலம் மோசடி செய்தல்

(C) கணினி மூல ஆவணங்களைச் சிதைத்தல்

(D) திருடப்பட்ட தகவல் தொடர்புச் சாதனங்களை நேர்மையற்ற முறையில் பெறுதல்

68. கணினியின் உரிமையாளரின் அனுமதியின்றி ஒருவர் கணினி அமைப்பிற்குள் நுழைந்து, அதில் சேமிக்கப்பட்டுள்ள ரகசியத் தகவல்களைப் பதிவிறக்கம் செய்கிறார். தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000-இன் கீழ் இதற்கான சட்ட விளைவுகள் என்ன?

(A) அந்தத் தகவல்கள் இணையத்தில் வெளியிடப்பட்டால் மட்டுமே அந்த நபர் பொறுப்பேற்க வேண்டும்.

(B) பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு வழங்க வேண்டிய பொறுப்பு அந்த நபருக்கு ஏற்படலாம்.

(C) பொருள் சார்ந்த சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றால் அந்த நபர் பொறுப்பேற்க வேண்டியதில்லை.

(D) கணினி அமைப்பு அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இருந்தால் மட்டுமே அந்த நபர் பொறுப்பேற்க வேண்டும்.

A

69. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 (POCSO Act)-இன் பிரிவு 4(1)-இன் கீழ், குழந்தைக்கு எதிரான ஊடுருவும் பாலியல் வன்கொடுமைக்கு (Penetrative Sexual Assault) விதிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச தண்டனை என்ன? பொருந்தக்கூடிய சட்டத்தின்படி பதிலளிக்கவும்.

(A) 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(B) 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(C) 1 ஆண்டு சிறைத்தண்டனை

(D) 6 மாதங்கள் சிறைத்தண்டனை

70. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 (POCSO Act)-இன் பிரிவு 7-இன் கீழ், குழந்தைக்கு எதிரான பாலியல் வன்கொடுமையாகக் கருதப்படுவது எது?

(A) பாலியல் நோக்கத்துடன், பாலியல் ஊடுருவல் இன்றி குழந்தையுடன் உடல் ரீதியான தொடர்பை ஏற்படுத்துதல்.

(B) நோக்கம் எதுவாக இருந்தாலும், குழந்தையுடன் ஏற்படுத்தப்படும் எந்தவொரு உடல் ரீதியான தொடர்பும்.

(C) பாலியல் ஊடுருவல் சம்பந்தப்பட்ட செயல்கள் மட்டுமே.

(D) குழந்தையுடன் மேற்கொள்ளப்படும் வாய்மொழித் தொடர்பு மட்டுமே.

71. மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 39 எதைக் குறிக்கிறது?

(A) தகுதிச் சான்றிதழ்

(B) அனுமதிச் சீட்டு

(C) பதிவு

(D) ஓட்டுநர் உரிமம்

72. மொத்த வாகன எடை (GVW) 12 டன்களுக்கு மேல் உள்ள சரக்குக் கொண்டு செல்லும் வாகனம் எந்த வகையைச் சார்ந்தது?

(A) M_1

(B) N_1

(C) M_2

(D) N_3

73. போக்குவரத்து வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும்?

(A) 3 ஆண்டுகள்

(B) 5 ஆண்டுகள்

(C) 10 ஆண்டுகள்

(D) 20 ஆண்டுகள்

74. ஓட்டுநர் உரிமத்தில் கூடுதல் வாகன வகையைச் சேர்ப்பதற்கான விண்ணப்பம் எந்தப் படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்?

(A) படிவம் 6

(B) படிவம் 7

(C) படிவம் 8

(D) படிவம் 23

75. கேரள மோட்டார் வாகன விதிகளின்படி, ஓட்டுநர் உரிமம் வழங்கும் அதிகாரம்: _____

(A) AMVI

(B) MVI

(C) JRTO

(D) RTO

76. 'கோல்டன் ஹவர்' (Golden Hour) என்பது எதைக் குறிக்கிறது?

(A) வாகன விபத்து நிகழ்ந்த 24 மணி நேரத்திற்குள் அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகார் அளிப்பதற்கான கால வரம்பு.

(B) கடுமையான காயம் ஏற்பட்டது குறித்து ஒரு மணி நேரத்திற்குள் புகார் அளிப்பதற்கான கால வரம்பு.

(C) விபத்து குறித்து 6 மாதங்களுக்குள் காப்பீட்டு நிறுவனத்திடம் புகார் அளிப்பதற்கான கால வரம்பு.

(D) மேற்கண்ட எதுவுமில்லை.

77. புதிய மின்சார ரிக்ஷாவிற்கு வழங்கப்படும் படிவம் 38-இன் செல்லுபடியாகும் காலம் எவ்வளவு?

(A) 3 ஆண்டுகள்

(B) 2 ஆண்டுகள்

(C) 1 ஆண்டு

(D) 5 ஆண்டுகள்

78. ஒரு வாகனத்தை இழுத்துச் செல்லும்போது அதிகபட்ச வேகம் எவ்வளவாக இருக்க வேண்டும்?

(A) மணிக்கு 30 கி.மீ.

(B) மணிக்கு 25 கி.மீ.

(C) மணிக்கு 35 கி.மீ.

(D) மணிக்கு 15 கி.மீ.

79. பின்வருவனவற்றில் ஓட்டுநரின் மிகப் பொருத்தமான கடமையைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) வாகனத்தில் அதிக ஒலியுடன் இசை ஒலிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(B) 12 வயது வரையிலான குழந்தைகள், அதற்கென வழங்கப்பட்டுள்ள பொருத்தமான குழந்தைகள் பாதுகாப்பு இருக்கையில் அமர்ந்திருப்பதை ஓட்டுநர் உறுதிசெய்ய வேண்டும்.

(C) எப்போதும் உரிய கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் வாகனத்தை ஓட்ட வேண்டும்.

(D) மேற்கண்ட அனைத்தும் சரியானவை.

A

80. எந்தச் சூழ்நிலையில் ஒரு வாகனத்தை முந்திச் செல்லக்கூடாது?

(A) சாலையில் உள்ள பாதசாரிகள் கடக்கும் வரிக்கோடுகள் (Zebra Crossing) அருகில்.

(B) முன்னால் செல்லும் வாகனம் வலதுபுறம் திரும்புவதற்கான சமிக்ஞை காட்டினால், அதன் இடதுபுறமாக முந்திச் செல்லலாம்.

(C) நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தை இடதுபுறமாக முந்திச் செல்லலாம்.

(D) பல வழித்தடங்களைக் (Multilanes) கொண்ட சாலையில் செல்லும்போது, முந்தப்படும் வாகனத்தின் இடதுபுறமுள்ள குறிக்கப்பட்ட வழித்தடத்தில் முன்னால் செல்லும் வாகனத்தை முந்திச் செல்லலாம்.

81. அவசரகால வாகனம் (Emergency Vehicle) பின்வரும் செயல்களில் எவற்றைச் செய்யலாம்?

(i) சிவப்பு போக்குவரத்து சமிக்ஞையைத் தாண்டிச் செல்லுதல்.

(ii) நிர்ணயிக்கப்பட்ட வேக வரம்பை மீறிச் செல்லுதல்.

(iii) "நுழையத் தடை" (No Entry) அல்லது "ஒருவழிப் பாதை" (One Way) விதிகளை மீறிச் செல்லுதல்.

(iv) சாலையின் ஓரப்பகுதியில் (Shoulder) வாகனத்தை ஓட்டிச் செல்லுதல்.

(A) (iii) மட்டும் சரியானது.

(B) (i), (ii) மற்றும் (iii) மட்டும் சரியானவை.

(C) நான்கும் சரியானவை.

(D) (ii) மற்றும் (iii) மட்டும் சரியானவை.

82. எந்தச் சூழ்நிலையில் ஒரு வாகனத்தை அதன் இடதுபுறமாக முந்திச் செல்லலாம்?

(A) முன்னால் செல்லும் வாகனத்தின் ஓட்டுநர் வலதுபுறம் திரும்புவதற்கான சமிக்ஞை காட்டிவிட்டு, சாலையின் மையப்பகுதியிலிருந்து திரும்பத் தொடங்கும்போது.

(B) முந்திச் செல்ல வேண்டிய வாகனம் நிறுத்தப்பட்டிருந்தால், அதன் இடதுபுறமாகப் பாதுகாப்பாக முந்திச் செல்லலாம்.

(C) பல வழித்தடங்களைக் கொண்ட சாலையில், முன்னால் செல்லும் வாகனத்தை இடதுபுற வழித்தடத்தில் பாதுகாப்பாக முந்திச் செல்ல முடிந்தால்.

(D) மேற்கண்ட அனைத்தும் சரியானவை.

83. ஒரு வாகனத்தில் ஏறும்போதும் இறங்கும்போதும், ஓட்டுநர் எவற்றின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்?

(i) தனது சொந்தப் பாதுகாப்பு.

(ii) மற்ற ஊழியர்களின் பாதுகாப்பு.

(iii) பயணிகளின் பாதுகாப்பு.

(iv) மற்ற சாலைப் பயனாளர்களின் பாதுகாப்பு.

(A) (i) மற்றும் (ii) மட்டும் சரியானவை.

(B) (ii), (iii) மற்றும் (iv) மட்டும் சரியானவை.

(C) (i), (ii) மற்றும் (iii) மட்டும் சரியானவை.

(D) நான்கும் சரியானவை.

84. MSM PSL கொள்கையின்படி, வாகனத்தின் திசையை மாற்றுவதற்கு முன் பின்பற்ற வேண்டிய செயல்முறைகளின் சரியான வரிசை எது?

(A) கண்ணாடியைப் பார்த்தல், சமிக்ஞை காட்டுதல், நிலையைத் தேர்வு செய்தல், வேகத்தைக் கட்டுப்படுத்துதல், கவனித்தல், திறமையுடன் இயக்குதல்.

(B) கண்ணாடியைப் பார்த்தல், சமிக்ஞை காட்டுதல், கவனித்தல், நிலையைத் தேர்வு செய்தல், வேகத்தைக் கட்டுப்படுத்துதல்.

(C) கவனித்தல், சமிக்ஞை காட்டுதல், நிலையைத் தேர்வு செய்தல், வேகத்தைக் கட்டுப்படுத்துதல், கண்ணாடியைப் பார்த்தல், திறமையுடன் இயக்குதல்.

(D) சமிக்ஞை காட்டுதல், நிலையைத் தேர்வு செய்தல், வேகத்தைக் கட்டுப்படுத்துதல், கவனித்தல், திறமையுடன் இயக்குதல்.

85. ஒரு சந்திப்பில் போக்குவரத்து நெரிசல் காரணமாக வாகனங்கள் நின்றுகொண்டிருந்தால், ஒரு வாகனம் என்ன செய்ய வேண்டும்?

(A) கவனமாகச் சந்திப்பிற்குள் நுழைய வேண்டும்.

(B) மற்ற ஓட்டுநர்களை எச்சரிப்பதற்காக ஒலிப்பானை ஒலிக்க வேண்டும்.

(C) போக்குவரத்து நெரிசல் சீராகும் வரை காத்திருந்து, அதன் பின்னர் சந்திப்பிற்குள் நுழைய வேண்டும்.

(D) குறைந்த வேகத்தில் சந்திப்பைக் கடந்து செல்ல வேண்டும்.

86. 6-வழித்தடம் மற்றும் 4-வழித்தடம் கொண்ட தேசிய நெடுஞ்சாலைகளில் சரக்கு வாகனங்களுக்கான வேக வரம்பு எவ்வளவு?

(A) மணிக்கு 95 கி.மீ.

(B) மணிக்கு 80 கி.மீ.

(C) மணிக்கு 65 கி.மீ.

(D) மணிக்கு 60 கி.மீ.

A

87. 6-வழித்தடம் கொண்ட தேசிய நெடுஞ்சாலைகளில், 9 இருக்கைகள் கொண்ட இலகு, நடுத்தர மற்றும் கனரக பயணிகள் வாகனங்களுக்கான வேக வரம்பு எவ்வளவு?

(A) மணிக்கு 90 கி.மீ. (B) மணிக்கு 100 கி.மீ.

(C) மணிக்கு 95 கி.மீ. (D) மணிக்கு 110 கி.மீ.

88. மோட்டார் வாகனச் சட்டம், 1988-இன் எந்தப் பிரிவின் கீழ், அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும்?

(A) 194A (B) 194B

(C) 194C (D) 194D

89. மோட்டார் வாகனச் சட்டம், 1988-இன் பிரிவு 134-இன்படி, விபத்து குறித்த தகவல்களை வழங்குவதற்குப் பொறுப்பானவர் யார்?

(A) ஓட்டுநர்

(B) காவல்துறை மற்றும் மோட்டார் வாகனத் துறை

(C) விபத்தை நேரில் பார்த்தவர்கள்

(D) மருத்துவமனை நிர்வாகத்தினர்

90. ஒரு வாகனத்தின் எடையைச் சோதிப்பதற்கு அதிகாரி ஒருவருக்கு அதிகாரம் அளிக்கும் மோட்டார் வாகனச் சட்டம், 1988 - இன் பிரிவு எது?

(A) பிரிவு 113 (B) பிரிவு 114

(C) பிரிவு 183 (D) பிரிவு 177

91. மத்திய மோட்டார் வாகனச் சட்டத்தில், 'நல்லெண்ண உதவியாளர்' (Good Samaritan) பாதுகாப்பு தொடர்பான பிரிவு எது?

(A) 134 (B) 134A

(C) 133 (D) 131

92. காயமடைந்த நபரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற 'நல்லெண்ண உதவியாளரின்' (Good Samaritan) அடையாளம், முகவரி போன்ற விவரங்கள் தொடர்பாகப் பின்வருவனவற்றில் எது சரியானது?

(A) அவற்றைக் கட்டாயமாகப் பெற வேண்டும்.

(B) அடையாளத்தை மட்டும் பெற வேண்டும்.

(C) விவரங்களைத் தெரிவிக்குமாறு கட்டாயப்படுத்தக் கூடாது.

(D) முகவரியைப் பெற வேண்டும்.

93. மத்திய மோட்டார் வாகனச் சட்டம் 194-இன் துணை விதி (1A) எதற்கான ஏற்பாட்டைக் குறிப்பிடுகிறது?

(A) அவசரகால வாகனங்களுக்குத் தடை ஏற்படுத்துதல்.

(B) அதிக சுமை ஏற்றுதல்.

(C) வாகனங்களை நிறுத்துவதற்குத் தடை விதித்தல்.

(D) வாகனத்தின் வெளிப்புற அமைப்பிற்கு அப்பால் சரக்குகள் நீட்டிக்கொண்டிருத்தல்.

94. சோதனையின்போது ஓட்டுநர் உரிமத்தையும் மற்றும் வாகனத்திற்குரிய ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடும் மத்திய மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு எது?

(A) 139 (B) 140

(C) 138 (D) 141

95. படிவம் 6A-இன்படி வழங்கப்படுவது எது?

(A) பழகுநர் ஓட்டுநர் உரிமம் (Learner's Licence)

(B) சர்வதேச ஓட்டுநர் அனுமதிச் சான்றிதழ் (International Driving Permit)

(C) ஓட்டுநர் உரிமம் (Driving Licence)

(D) நடத்துநர் உரிமம் (Conductor Licence)

96. இந்தியாவில் மோட்டார் வாகனங்களின் முன்மாதிரிச் சோதனை (Prototype) மற்றும் வகை ஒப்புதலுக்கான (Type Approval) நிறுவனம் எது?

(A) FSSAI (B) ARAI

(C) SITRA (D) KFR

97. பின்வரும் வாகனங்களைத் தவிர, பொதுவாக எந்த மோட்டார் வாகனமும் ஆலிவ் பச்சை நிறத்தில் வர்ணம் பூசப்பட்டிருக்கக் கூடாது. அவ்வாறு வர்ணம் பூச அனுமதிக்கப்பட்ட வாகனம் எது?

(A) காவல்துறை வாகனம்

(B) தீயணைப்புத் துறை வாகனம்

(C) பாதுகாப்புத் துறை வாகனம்

(D) கலால் துறை வாகனம்

98. இயந்திரத்திலிருந்து வெளியேற்றப்படும் வாயுவின் (Exhaust Gas) இரைச்சலைக் குறைக்க உதவும் வாகனப் பகுதி எது?

(A) வேறுபாட்டு அலகு (Differential Unit)

(B) உள்வாய்க் குழாய் (Inlet Manifold)

(C) இரைச்சல் தடுப்பான் (Silencer)

(D) காற்று சுத்திகரிப்பான் (Air Cleaner)

99. அபாயகரமான சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் எது பொருத்தப்பட்டிருக்க வேண்டும்?

(A) பல ஒலி எழுப்பும் காற்று ஒலிப்பான் (Multi-tone Air Horn)

(B) தீப்பொறித் தடுப்பான் (Spark Arrester)

(C) பயணச்சீட்டு வழங்கும் இயந்திரம் (Ticket Machine)

(D) மீன் வலை (Fish Net)

100. நேருக்கு நேர் ஏற்படும் மோதல்களின்போது ஓட்டுநரின் மார்புப் பகுதியில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க உதவுவது எது?

(A) மடங்கக்கூடிய திசைமாற்றுத் தண்டு (Collapsible Steering Column)

(B) புல் அண்ட் புஷ் ராட் (Pull and Push Rod)

(C) டிராப் ஆர்ம் (Drop Arm)

(D) டிஸ்க் பிரேக் (Disc Brake)

———————

SPACE FOR ROUGH WORK

A

SPACE FOR ROUGH WORK